**தமிழ் இணையக் கல்விக்கழகம்**
**சென்னை – 600 025.**

**இளநிலைத் தமிழியல் – பட்டம் (B.A. TAMILOLOGY – Degree)**

**முதலாம் ஆண்டு – முதற் பருவம்**

**நேரடி எழுத்துத் தேர்வு (OFFLINE WRITTEN EXAMINATION)**

**ஜனவரி – பிப்ரவரி 2021**

**P101 சிறுகதையும் புதினமும்**

**காலம் : 3 மணி நேரம்** **மதிப்பெண்கள் : 75**

(குறிப்பு : பிரிவு – 1இல் இருந்து அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க வேண்டும். விடை ஒன்றிற்கு ஒரு மதிப்பெண். பிரிவு – 2இல் இருந்து ஐந்து வினாக்களுக்கு விடை தர வேண்டும். ஒவ்வொரு விடையும் ஒரு பத்திக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 3 மதிப்பெண்கள். பிரிவு – 3இல் இருந்து மூன்று வினாக்களுக்குக் கட்டுரை வடிவில் விடையளிக்க வேண்டும். ஒவ்வொரு விடையும் 3 பக்கங்களுக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 15 மதிப்பெண்கள்.)

**பிரிவு – 1**

**ஒரு சொல் / தொடரில் விடை தருக.** **(15x1=15)**

1. சிறுகதை வடிவம் குறித்து விந்தன் கூறிய கருத்து யாது?
2. தமிழ்ச் சிறுகதைகளின் மூலவர்களாகக் கருதப்படுபவர்கள் யாவர்?
3. புதுமைப்பித்தன் எழுதிய கதைகளின் எண்ணிக்கையைக் கூறுக.
4. தொடக்ககாலப் பெண் சிறுகதை ஆசிரியர்கள் இருவரைக் குறிப்பிடுக.
5. பாரதியார் எழுதிய சிறுகதைகளில் இரண்டனைச் சுட்டுக.
6. சிறுகதையை வளர்த்தெடுக்கும் மலேசியத் தமிழ் இதழ்கள் எவை?
7. விந்தன் நடத்திய இதழ் எது?
8. தி. ஜானகிராமன் எந்த நூலுக்காக சாகித்ய அகாடமி விருது பெற்றார்?
9. அண்ணாவின் முதல் சிறுகதை என எதனைச் சுட்டுவர்?
10. பிரபஞ்சனின் இயற்பெயர் யாது?
11. உளவியல் ரீதியில் எழுதப்பட்ட அம்பையின் கதை எது?
12. உலகில் முதன்முதலாக வெளிவந்த புதினம் என, எது கருதப்படுகிறது?
13. தொடக்ககால, தமிழ் துப்பறியும் நாவலாசிரியர்கள் யாவர்?
14. வரலாற்றுப் புதின ஆசிரியர்கள் இருவரைக் கூறுக.
15. மண்ணகத்தில் பூந்துளிகள் என்ற நாவல் பேசும் பிரச்சனை யாது?

## பிரிவு – 2

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு ஒரு பத்தி அளவில் விடை தருக. (5x3=15)**

1. சிறுகதை வகைகள் குறித்து எழுதுக.
2. கு. அழகிரிசாமியின் நடையை விளக்குக.
3. ஆர். சூடாமணி கதை மாந்தர்கள் பற்றி எழுதுக.
4. அண்ணாவின் வரலாற்றுச் சிறுகதைகள் பற்றிக் கூறுக.
5. வட்டார நாவல்கள் பற்றி மதிப்பிடுக.
6. பொன்மலர் கதை அமைப்பு குறித்து விளக்குக.
7. 'கானல்' கதை மாந்தர்கள் பற்றி எழுதுக.
8. 'என் இனிய எந்திரா' நாவல் சுட்டும் வாழ்க்கை மாற்றத்தை எழுதுக.

## பிரிவு – 3

**மூன்று பக்கக் கட்டுரை வடிவில் விடை தருக. (3x15=45)**

1. (அ) சிறுகதைக்கும் புதினத்துக்கும் உள்ள ஒற்றுமை வேற்றுமைகளை விவரி.

(அல்லது)

(ஆ) தமிழ்ப் புதினத்தின் தோற்றம் வளர்ச்சி குறித்து கட்டுரை எழுதுக.

2. (அ) புதுமைப்பித்தன் சிறுகதைகள் குறித்து விளக்குக.

(அல்லது)

(ஆ) விந்தன் படைப்புகளின் நடை மற்றும் சமுதாயப் பார்வையை விவரி.

3. (அ) 'கோபல்லபுரத்து மக்கள்' கதை மற்றும் கதைமாந்தர்களின் சிறப்புகளை விளக்குக.

(அல்லது)

(ஆ) துப்பறியும் புதினங்கள் குறித்து விவரிக்க.

***